**கோபிசெட்டிபாளையம் நகராட்சி**

**25.07.2023 ந் தேதி நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் முழு நேர மக்கள் பணியில் ஈடுபட்டுள்ளதால் மாதம் தோறும் மதிப்பூதியம் வழங்க வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

அனைவரின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து தமிழக முதல்வரின் உத்திரவிற்கிணங்க தமிழ்நாடு அரசு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத் தலைவர், மன்றத் துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதம் தோறும் மதிப்பூதியம் வழங்க நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை எண்.98 நாள்.13.07.2023 இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

நகர்மன்ற தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு மதிப்பூதியம் ரூ.15,000/-(ரூபாய் பதினைந்தாயிரம்) நகர்மன்ற துணைத்தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மாதம் தோறும் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) 2023 ஆம் ஆண்டு ஜீலை மாதம் முதல் மதிப்பூதியம் வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் முழு நேர மக்கள் பணியில் ஈடுபட்டுள்ள நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு மதிப்பூதியம் வழங்கிய மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நகர்மன்ற தலைவர் , துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம் .

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.577**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி